# திராவிடநாடு

19—2—61 | வார வெளியீடு | விலை 16 காசு


## மீட்க முனைவோம்!

—[ பொன்னிவளவன் ]—

வண்டினமும் கொண்டபசி தீர்க்க எண்ணியே—எங்கும்
வட்டமிட்டுத் தேன்மலரைத் தேட வில்லையா?

கொண்டபசி தீர்த்திடவே கொஞ்சு கிளிகள்—பழங்
கொண்டமரத் தோப்பினிலே கூட வில்லையா?

கண்டுநிகர் முத்தமிடக் காதல் பெறவே—ஒரு
காதலியை ஆண்மகனும் தேட வில்லையா?

தண்டநிலை போக்கிடநம் தேவை பெறவே—நம்
தமிழகத்தைத் திராவிடத்தை மீட்க முனைவோம்!

நுண்ணறிவு தேவைஎனும் எண்ணம் உடையோர்—ஒரு
நூல்நிலையம் தேவைஎன எண்ண வில்லையா?

கண்குளிரக் காட்சிபல காண விழைவோர்—படக்
காட்சிபல காணுதற்குச் செல்ல வில்லையா?

உண்ணுதற்குச் சோறுதேவை என்று நினைப்போர்—ஒரு
ஊதியத்து வேலையினைத் தேட வில்லையா?

எண்ணியதை நாம்அடைய இன்பம் அடைய—நல்
இன்பமிகும் திராவிடத்தை மீட்க முனைவோம்!

# வள்ளியின் தேவி



**சி. என். ஏ.**

அந்தப் பசுங்கன்று, 'அம்மா' என்றழைத்ததுமே, துள்ளி எழுந்திருப்பாள், வள்ளி. தாயில்லை 'தேவி'க்கு, நான்தான் இனிமேல் துணை, என்று தாயாகும் வகைகூட அறியாமுடியாச்சிறுமி, வள்ளி எண்ணிக்கொண்டாள். அவ்வளவு ஆசை அவளுக்கு கன்றிடம். அந்தப் பசுங்கன்றும், அன்புடன் தன்னைக் காக்கும், வள்ளியைக் கண்டதுமே, வாலடித்துக் காதாட்டி, கழுத்தை வளைத்து வளைத்து ஏதேதோ பேசி நிற்கும்; இப்பெண், கன்று பேசுவதைக் கண்டறிந்து கொண்டவள்போல், அடிவயிற்றிலே முள்ளா? ஐயோ, பாவம் உனக்கு எவ்வளவு வலித்திருக்கும்! ஏன் போனாய் புதர்நடுவில்! புல் இருக்கும் இடம்விட்டு, போக்கிரியாய்த் திரிகின்றாய்—பார்த்தாயா, முள்தைத்து இந்தப்பாடுபடுகிறாய். வேண்டாமடி தேவி! வேலை தவறாமல், புல்பறித்து நான் தருவேன்; என்ன குறை உனக்கு? என்றெல்லாம் பேசுவாள், சிரிப்பாள், கன்றின் கழுத்தைத் தழுவி நிற்பாள், முத்தம்கூடச் சில சமயம், கொடுத்துவிட்டுச், சுற்றுமுற்றும் பார்ப்பாள். இத்தனைக்கும் அந்தக் 'கன்று' தரமான சிந்தி என்றும் சௌராஷ்டிரப் பசுவென்றும், கூறுவது போன்ற இனமும் அல்ல; வள்ளிபோன்றே, கிராமத்து இனம் தான்; ஆனால், அதற்கு மட்டும், தானாக ஓர் அழகு, தளதளவென்று வந்தது. மானல்ல பசுதான், அதன் கண்மட்டும் அந்தவிதம், என்று பலரும் கூறும் எழிலோடு இருந்தது. என்ன பெயரிட்டு, என் கன்றை நானழைக்க என்று ஏழேட்டு நாட்கள், வள்ளி எண்ணி எண்ணிப் பார்த்தாள். ஊரார், பாலும் பழமும் போட்டுப், படையலையும்போட்டு, கும்பிட்டுக்கொண்டாடும் குலதெய்வத்தின், பெயர் தேவி! அந்தப் பெயரையே நான் என் கன்றுக்கு வைத்திடுவேன் என்று அந்தச் சிறுமி சொன்னாள்; அப்பா செய் என்றார்; அம்மாவும், உள்ள வேலைகளைவிட்டு, உனக்கேண்டி வீண்வேலை? மேயவிடு, காலாற; கட்டிப்போட்டு வைத்தால், காசுக்கு உதவாது, புல்தேடி மேய்ந்தால்தான், வலிவுபெறும், வளரும் என்பாள். தேவிக்கு வேண்டியதைத் தேடித் தருவதிலே அவள் பெற்ற இன்பத்தைத் தாய் அறிந்துகொள்ளவில்லை.

"தேவி"யைப் பெற்ற பசு, தேனப்பன் குடிசையிலே, இருந்தது. பால் விற்றுப் பணம்சேர்த்து, பட்டகடன் தீர்த்திடலாம், என்ற திட்டம் கொண்டு, பக்கத்து ஊரினிலே, வட்டிக்குக் கடன்கொடுக்கும் வரதப்பனிடமிருந்து, வாங்கிவந்த இருநூறு ரூபாயும், வாழையடிச் சந்தையிலே கொடுத்து கொண்டுவந்தான், தேனப்பன், பசு ஒன்று.

சிற்றூரில் இருப்போர்க்கு இது சேதி; எனவே அவர், தேனப்பன் முற்றம்வந்துபார்த்து, சுழி கண்டு, மடிகண்டு, நல்ல பசுதானப்பா! விலையும் அதிகம் இல்லை! மேய்ப்பிலும் தேய்ப்பிலும், தீனி நன்றாய் வைப்பதிலும்தான், பசுவுக்குப் பால்வளம் அதிகமாகும். ஆகவே அதனை நன்றாகக் கவனித்து, வளர்த்துவா என்றுரைத்துப் போனார்கள். எனக்கென்ன, இதைக்கூடக் கற்றுக்கொடுத்திடவாவேண்டும் என்றெண்ணித் தேனப்பன் சிரித்துக் கொண்டான்.

ஆயிரம் கொடுத்தாலும், இதற்கு ஈடு காணாது என்று கூறி ஏழெட்டு ஆண்டுகளில், மெத்தப் பொருள் குவித்த, மேட்டுக்குடிவாசி, மெய்ஞானம்பிள்ளை, வாங்கிவந்த பசுவை, பக்குவமாய்ப் பராமரித்துவரும் பழக்கம் அவனுக்கு உண்டு.

மெய்ஞானம் வீட்டிலே, தேனப்பன் வேலைக்காரன். என்னென்ன வேலைகளை எஜமான் தருகின்றாரோ, அதனை எல்லாம் செய்துமுடித்துவிட்டு, வீடு திரும்புமுன்னே, பசுவுக்கு வேண்டியதைப் பார்த்துச் செய்தாயா, என்று அவர் கேட்பார்; இவன் அதனையும் செய்திடுவான்.

அதனால், பசு வளர்க்கும் முறையிலேயும் அவன் பக்குவம் பெற்றிருந்தான். எனவேதான், எளிதாய், பசுவளர்த்துப் பால்விற்றுப் பணமும் சேர்க்கலாமென்று அவனுக்கு எண்ணம் வந்தது.

வாங்கிவந்த பசுவின் கன்றுதான், தேவி.

தாயுடன் கன்று சேர்ந்து தோட்டத்துக்கு அழகு தந்திட்டது கண்டு, தேனப்பனும் மகிழ்ந்தான். ஆனால், ஓர்நாள், மேய்ந்துவிட்டு வந்தபசு, வயிறு உப்பிப்போய், மேல்மூச்சு விட்டபடி, மிரள மிரள விழித்தது கண்டான்.

தாய்படும் கஷ்டத்தின் தன்மை அறியாக் கன்று, வழக்கம்போல், துள்ளுவதும், வாலாலடித்து மகிழுவதும், கயிற்றை அறுத்துக் கொண்டு பாலுண்ணப்பாய்வதுமாய், இருந்தது.

( 4-ம் பக்கம் பார்க்க )

# உலகம் ஒப்பாத அநீதி

ர் 19]　ஆண்டு சந்தா ரூ. 8　(19—2—61)　தனிப்பிரதி 16 காசு　[இதழ்

காங்கோநாட்டின் முதல்வர் — விடுதலை பெற்றுத் தந்த வீரத்தலைவர் லுமும்பா அவர்கள் படுகொலை செய்யப்பட்டார் என்ற திடுக்கிடும் செய்தி உலகம் முழுவதுக்குமே ஒரு பேரதிர்ச்சியைத் தந்துவிட்டது.

மனித நாகரிகம் படைத்த எவராலும் இந்தக் கொடுமை பொறுத்துக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

காங்கோ விடுதலைபெற்றதும், அதன்ஒருபகுதியாக இருந்த கடாங்காவைப் பிரித்து, அதனைத் தங்கள் சதிக் கோட்டையாக அமைத்துக்கொண்டவர்கள், பெல்ஜியம் போன்ற ஆதிக்க வெறிபிடித்த நாடுகளுடன் உறவு கொண்டு, விடுதலை வீரனும் லுமும்பாவைத் தொலைத்துக்கட்டுவதில் தீவிரமாக ஈடுபட்டு இந்த மாபெரும் துரோகத்தை ஈவிரக்கமின்றி—மனிதப் பண்பாட்டை மறந்து—இழந்து செய்திருக்கின்றனர் என்பதை எண்ணும் எவரும், இந்த இருபதாம் நூற்றாண்டிலும் இப்படி ஒரு காட்டுமிராண்டிக் கும்பல் இருக்கிறதா என்று எண்ணிக் கண்ணீர் வடிக்காமல் இரார்.

ஆனால், லுமும்பா அவர்கள் கொலைசெய்யப்பட்டதை முதன் முதலில் தெரிவித்த கடங்கா நாட்டு அமைச்சர் ஒருவர்மட்டும் துளியும் கலக்கமோ இரக்க உணர்ச்சியோ இன்றி லுமும்பாவைக் கொலைசெய்தது முற்றிலும் நியாயமானதுதான் என்று அறிவிக்கும் அளவுக்குத் துணிவுபெற்று அறிக்கை வெளியிட்டிருக்கிறார் என்றால், இத்தப் படுகொலை, தக்க முன்னேற்பாடுகளுடன்—தற்போதைய காங்கோநாட்டுத் தலைவர் கசாவுபு, மொபுடு போன்றார்களால் திட்டமிட்டுச் செய்யப்பட்ட அநீதி என்பதை மெய்ப்பிக்க வேறெந்த ஆதாரமும் தேவையில்லை.

லுமும்பா அவர்கள் படுகொலை செய்யப்பட்டது குறித்து வேறு இதழ்களுக்கு விடுத்துள்ள இரங்கற் செய்தியின் ஒருபகுதியை இங்கு வெளியிடுகிறோம்.

"காங்கோ நாட்டு விடுதலை வீரர்—முதலவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட லுமும்பா, அரசியலில் இடம் பிடித்துக்கொண்டு ஆதிக்க வெறியுடன் அலையும் காட்டுமிராண்டிகளால் கொல்லப்பட்டார் என்ற செய்தி கேட்டு, திடுக்கிட்டுப் போனேன்; உலகமே திடுக்கிட்டுப் போயிருக்கிறது. லுமும்பா, உலகிலே பல்வேறு நாடுகளில் உள்ள கோடிக்கணக்கான விடுதலை விரும்பிகளின் இதயத்தில் இடம் பெற்றுவிட்டார்.

எவர் இந்தக் காட்டுமிராண்டிச் செயலுக்குக் காரணமாயிருந்தனரோ அவர்களை, மனிதகுல துரோகிகள் என்று உலகம் தீர்ப்பளிக்கும். உலக நாடுகளின் மன்றம் உடனடியாகக் கூடி, இந்தக் கயவர்களைக் கண்டறிந்து, தண்டித்து அறம் காத்திட வேண்டும்.

லுமும்பாவின், உடலிலிருந்து கீழே விழுந்த ஒவ்வொரு துளி இரத்தமும் மனித குலம் வடிக்கும் கண்ணீராகும். லுமும்பாவைத் தங்கள் வழிகாட்டியாகக் கொண்டிருக்கும் காங்கோ மக்களுக்கு நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவரது குடும்பத்தினருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபம்.

**வெட்டிச் சாய்க்கப்பட்டது லுமும்பா அல்ல; அறம் வெட்டிச் சாய்க்கப்பட்டிருக்கிறது. உலகு, மாவீரனுக்கு வீர வணக்கம் செலுத்துகிறது. லுமும்பா கொல்லப்பட்டார்; கொடுஞ்செயல் புரிந்தோர் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களைக் கண்டறிந்து தண்டித்தால் ஒழிய அறம் நிலைக்காது; அவனியில் நீதி தழைக்காது."**

என்று அந்தச் செய்தியில் குறிப்பிட்டுள்ளோம்.

எனவே, விடுதலை பெற்ற நாடுகளின் சுதந்தர வாழ்விலும், உலக சமாதானத்திலும் அக்கரைகாட்டும் தலைவர்கள் இந்த நேரத்தில் ஒன்றுகூடி இந்தப் பெரும் பாதகச்செயலுக்கு ஒரு நியாயமான தீர்வுகாண முன்வரட்டும். அப்போதுதான் நீதி நிலைக்கும், நேர்மை பாதுகாக்கப்படும்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

பசுவோ, வாய்விட்டு எதைச் சொல்லும்! வயிற்றிலே வேதனை. நிற்க முடியவில்லை, நிலைகொள்ள வில்லை. தாளமுடியாத வலியால், பசு, காலை உதைத்தும், கண்ணில் நீர் வடித்தும், கம்மிய குரலாலே 'அம்மா!' என்று கதறுவதுமாக இருந்தது.

தேனப்பனுக்கு அன்று அதிக வேலை. தெருவிலே போட்டிருந்த பந்தல், பழசாகிப்போனதாலே, பார்க்க நன்ருக இல்லை, பிரித்துவிடு என்ருர் எஜமான்.


பந்தல் அமைப்பதற்கு ஆட்கள் உண்டு தனியாக. பிரிக்கக்கூடவா அவர்கள்? இதை நீ செய்யலாமென் ருர். அவர் சொல்லியான பின்னர், ஆகாது என்று சொன்ஞல், சீட்டுக் கிழிந்துவிடும்; தேனப்பனுக்குத் தெரி யும். ஆகவே, பந்தலினைப் பிரிக்கும் வேலையினை மெத்தக் கஷ்டத்தோடு தேனப்பன் செய்திட்டான்.

மேலே கழிகள் விழும், இவனும் கீழே விழுவான், ஏணி நழுவுவது இவனுக்குத் தெரியாது.

தூசு கண்ணில் விழும், துளைத் துக்கொண்டு கண்ணீர் வரும், நின்று அதைத் துடைக்க நேரம் இல்லை, பந்தலிலே பாதி அளவும் பிரித்து ஆகவில்லை; பகல் போது பயந்து ஓடுவது, இவனுக்குத் தான் தொல்லை.

இத்தனை தொல்லைக்கிடையில், மூங்கிற் கழியினிலே, பொந் தமைத்து இருந்துவந்த, கருந்தேள் வெகுண்டு வந்து, தேனப்பன், கை விரலைக் கொட்டிற்று. துடித்து அவன் அழுதான் — தேளை அடித் தாயா, விட்டாயா, என்று கேட்டு எஜமானர் கோபத்தைக் கொட்டு கிருர்.

பச்சிலை போடாவிட்டால், நெஞ் சுக்கு விஷம் ஏறும் என்று கூறிஞள் கூட்டி மெழுகும் வேலை செய்து வரும் காமாட்சி.



சுண்ணும்பை எடுத் துத் தேள் கொட்டிய வாயில் வைத்து, அப்பி ஞல், விஷம் போகும் அரைநொடியில் வலியும் போகும், கைகண்ட மருந்து இது என்று கடன் வாங்க வந்திருந்த சின்னப்பன் சொன்ஞன். இதற்குள், தேனப்பன் உடல் வேர்த்து, மார்பு அடைப்பதுபோலாகிப் போக, இனி வீடுபோடா! தேனப்பா! உனை நம்பி, எந்தக் காரியம்தான் ஒழுங்காக நடந்திருக்கு! ஏதேதோ கிடைக்கும் சாக்கு!' என்று எஜமா னர், எரிச்சலோடு, ஏசி,

(13-ம் பக்கம் பார்க்க)

## வாசகர்களுக்கு

பொங்கல் விடுமுறைக் குப் பின் "திராவிட நாடு" இதழ் 12—2—61 முதல்தான் வெளிவந்து கொண்டு இருக்கிறதென் பதைச் சந்தாதாரர்களுக் கும், வாசகசாலைகளுக்கும் தெரிவித்துக் கொள் கிரேம்.

பொறுப்பாளர்


## "அன்னை"

ஆசிரியர்:

சத்தியவாணி முத்து, எம். எல். ஏ.

வண்ண முகப்பு, கதை, கட்டுரை, காவியம், கழகச் செய்திகளைத் தாங்கித் திங்கள்தோறும் வெளிவருகின்றது.

ஆண்டு சந்தா: ரூ. 3—00

தனிப்பிரதி விலை: 25–புதிய காசு

ஏஜண்ட் இல்லாத ஊர்களில் முன் பணம் கட்டக்கூடியவர் கள் விண்ணப்பிக்கவும்.

"அன்னை" அலுவலகம்,
24-C ஐதர் கார்டன், கிருஷ்ணதாஸ் ரோடு,
பெரம்பூர். சென்னை-12.

காஞ்சீபுரம்

19-2-'61.

# தம்பி!

தி. மு. கழகம் துவக்கப்பட்டதும் இது முளைவிடாது என்று பயம் காட்டினர்,
அரசியலில், 'மிட்டாமிராசு பாத்யதை' கொண்டாடும் போக்கினர்.
தி. மு. கழகம், முளைவிட்டது; வளர்ந்தது, பசுமை பாங்காகத் தெரிந்தது.
தி. மு. கழகம், நாலுநாள் கூத்து; ஆடி அடங்கிவிடும், ஆருடம் கேளும் என்றார்,
அரசியலை நடாத்தும் அருங்கலையில் வல்லவர்கள் யாமே என்று ஆர்ப்பரிக்கும்
போக்கினர்.
தி. மு. கழகம், ஆண்டுக்காண்டு புதுப் பொலிவுபெற்று வளர்ந்து
வரலாயிற்று.
ஏழெட்டுப் பேர்வழிகள் எங்கும் சுற்றி, என்னமோ கழகம் என்று
பேசுகின்றார்; ஈதல்லால் இவரின் பக்கம் எவர் சேர்வர், கூறும் என்று,
எல்லோர்க்கும் தாமே வழிகாட்டி என்று எண்ணிக்கொண்டோர் ஏளனம்
கூறி நின்றார்.
தி. மு. கழகமே எமது இடமாகும் என்று, உழவர்முதல் சிறு வணிகர்வரை கூறலானார்;
மாணவரும், நாட்டின் மாண்புகாக்க இப்பாசறையில் யாம் சேர்வோம் என்று வந்தார்; ஆலை
தனில் வேலைசெய்யும் பாட்டாளித் தோழர் அருங்கலைகளில் ஈடுபட்டு ஏற்றம் பெற்றார் அனை
வருமே, இது எங்கள் கழகம் என்று இடம் பெற்று உயிரூட்டம் தந்தனர்; வரலாறு அறிந்
தோரும் வந்தார் இங்கு; தமிழர் வாழ்ந்தவிதம் கூறி நின்றார் புலவர் பல்லோர்; கவிவல்லோர்,
இசைவாணர் துணைநின்றார்; கவர்ச்சிமிகு வடிவுடன் கழகம் மிளிர்ந்ததாங்கே.
ஆமப்பா! இதுகளுடன் யார்தான் சேர்வார்? அன்னக்காவடிகள் ஐந்தாறு
சேரும்; ஆடிப்பிழைப்போரும் பாடி வாழ்வோரும் கூடினர் அங்கு என்றால், ஆவது
என்ன அவரால்? பேசுவர் சுவைசொட்ட, வேறென்ன இயலும்; சாயம் பூசுவர், ஆடுவர்
நாடகம்; கண்டோர்க்குச் சிரிப்புமூளும், அஃதேயன்றி, கிளர்ச்சி செய்ய வல்லவரோ
கழகத் தோழர்! கிண்கிணியும், கழலாமோ, கூறும் என்று கேட்டுவிட்டு இடிச்சிரிப்பைக்
காட்டி நின்றார், எவருக்கும் திறம் இல்லை, தீரம் இல்லை என்று கூறும் மேலோர்!
நாட்டினிலே உள்ள இழிவுதனைத் துடைத்திடத்தான், நாங்கள் எங்கள் குருதியையும்
தருவோம் என்று சூளுரைத்துக் கிளர்ந்தெழுந்தார், கழகத் தோழர்; சுடுசொல்லைத் தாங்கி
நின்றார், துவளவில்லை; கடுஞ்சிறைக்கு அஞ்சி அவர் ஒளியவில்லை, கைகால் கண் போயினும்

## 1961-ம் ஆண்டுக்கான திட்டம் இதுதானா?

கலங்கவில்லே; இன்னுயிரே போயிற்று, வீரம்மட்டும் இம்மியளவும் குறைவாகிப்போகவில்லே; வீறிட்டுப் பாய்ந்துவந்த விடுதலேவேகம் கண்டு கைபிசைந்து நின்ருர் காங்கிரஸ் ஆட்சியாளர்தானும்.

ஈதென்ன பெருவீரம்! சிறையுள் சென்று இருந்துவிட்டு, வெளிவந்து பேசுகின்ருர். கிளர்ச்சி எனில் தக்கதோர் நியாயம்வேண்டும்; எடுத்ததற்கெல்லாம்எதிர்ப்புக் காட்டி வந்தால், எவர் இவரை மதித்திடுவார், கூறும். நாடு ஏற்கும் திட்டம் உண்டு என்ருல், நல்லபடி அதனே எடுத்துரைத்து, மக்களிடம் ஒப்பம் பெற்ருலன்ரே, மதித்திடுவர் மாநிலத்தில் உள்ளோர் எல்லாம்; இங்கிதமான இம்முறையைவிட்டு எதற்கெடுத்தாலும் ஒழிக! ஒழிக! என்று இரைச்சலிட்டுப் பலன் என்ன? என்று பேசிக், குன்றனேய மதிபடைத்தோர்போலக் கோலம் காட்டி நின்ருர் காங்கிரஸ் ஆட்சியாளர்.

சிறை செல்லமட்டுந்தான் தெரியுமென்று எண்ணற்க; நெஞ்சத்துள்ள சிறைக்கதவுதான் திறந்துவைக்கும் அந்தத் திறமும் எமக்கு உண்டு என்று, செப்பியே கழகத்தார், சுற்றிச் சுற்றி, விளக்கமெல்லாம் அளித்தார் விடுதலேப் போரிஜேப்பற்றி; வீழ்ந்துபட்ட திருஇடமும் மீண்டும் வெற்றிக் கொடி நாட்டி எழுந்திடவே அறப்போர் காணீர் என்ருர்; திட்டமெது என்பீரேல், ஒன்று உண்டு; அதனுள்ளே பலப் பலவுமான திட்டம், ஆலின் விதைக்குள்ளே பல்லாயிரம் இருப்பதுபோல உளது என்று, அறைந்தனர் மாற்ருர் அதிரும்வண்ணம், திராவிடநாடு திராவிடர்க்கே எனும் முழக்கம்.

முழக்கமாம், முழக்கம் கேட்டீரோ! இவ: எழுப்பும் முழக்கமெலாம், நாடகம்தான், வேருென்றில்லே! பழம் பெருமை பேசுகிருர் பார்த்தவர்போல்; படக்காட்சி காட்டுகின்ருர் திராவிடம் என்பதாக; நாடகமாடிடும் இவர்கள்தானே நாடாள வருவார்கள், முறையோ என்று, நாப்பறையை எழுப்பி நின்ருர், நாடாளும் நப்பாசை கொண்டோரெல்லாம்.

நாடகமும் படமும், தொழில்; அறிவீர் ஐயா! நல்ல அந்தத் தொழிலும் நெஞ்சை அள்ளும் திறமுடைத்து; எள்ளி நகையாடும் ஏந்தலெல்லாம், வெள்ளேயரை எதிர்த்த காலே, வேண்டிப் பெறவிலேயோ, கலேஞர் தொண்டு! — என்று கழகத்தார் கூறிக் காத்தார்; கலேயினேயும் அஃதளிக்கும் கருத்தோட்டத்தையும். கலேஞர் எனில், எங்கிருந்தோ வந்து சேர்ந்த வியப்பளிக்கும் பொருளல்ல, அவரும் நம்மில், ஓர் அங்கம் அறிந்திடுவீர், அவர்க்கும் உண்டு அன்னேமொழி காத்திடும் உரிமைதானும்; நாடு நமதாக வேண்டும் என்று நல்லோர்கள் கிளம்பிப் போர் புரியும் காலே, நாடகம் நடாத்திடுவோர்க்கும் வேலே உண்டு என்றும் கூறி, நமது கழகத்தோரும் நாடகமே ஆடி மகிழ்வித்தார்கள், நாட்டவரை, கலேஞரையும் கூடத்தானே!

கலே உலகு உமதே என்று கருவம்கொண்டு அலேகின்றீர்கள்; காட்டுகின்ருேம் எமது திறம் பாரும் என்று, கத்ருடைய கலேஞர்கனே அழைத்துவந்து, கண் சிமிட்டி நின்ருர் காங்கிரஸ் அமைச்சரெல்லாம்; காட்சி கண்டு, கலகலத்துப்போகும் கழக அணி என்ருர்.

கலேயுலகில் கீர்த்திபெற்ற தோழரெல்லாம், பாடி மகிழ்விக்க மேடை வந்தாரில்லே, கழகம் காட்டும் பாதையினே மற்றவர்க்கு எடுத்துரைக்கும் பணி மேற்கொண்டார்; திரு இடத்தின் சீரெல்லாம் படித்துணரத்தலேப்பட்டார்கள்; வெறும் சிரமசைக்கும் பதுமைகளாய் இல்லே; சிறையும் செல்ல முன்வந்தார்; முக்காடிட்டு ஓடவில்லே; கழக அணி தன்னில் இவர் சேர்ந்த பின்னர், கலேத்துறையில் பணிபலவும் செய்யும் தோழர், பாட்டாளிகள் பலரும் வந்து சேர்ந்தார்; விடுதலேக்குப் பாடுபட முனேந்து நின்ருர். கலேயுலகில் நிலே பெற்ருேர் கழகமதில் வந்ததாலே, கலேயுலகப் பிரச்சினேயை அலசிப்பார்த்து, எமது நிலே உயர வழிகோலக் கழகம் என்னென்ன திட்டங்கள் கொள்ளும் என்று கேட்டு அவர்கள் இருந்தார் இல்லே; எமக்கு என்று ஏற்பட்ட தொழில் கலே; எனினும் அஃதும், எமது கழகம் காட்டும், வழி நடக்கத் துணே நிற்கும் என்பதால்தான் இருக்கின்ருேம் அத்துறையில் தானும் என்ருர். அர்ஜுனேயும் வேடமிட்டு அளிப்பேன் இலட்சம் என்றுரைக்கும் முதலாளியின் முகமும் சுண்ட, எமது பணி விழைவீரேல், இதனேக் கேளும்; எமது கொள்கைக்கு ஊறுநேராவண்ணம் இருந்தாலன்றி, படமதனில் நாங்கள் நடிக்கமாட்டோம்; நாங்கள் படத்தொழிலுக்காக மட்டும் உள்ளோம் அல்லோம்; பாங்கான திராவிடம் காணும் நோக்கம் கொண்டுள்ளோம், அறிந்திடுவீர் என்று சொல்லி, பண்பு காத்தார்.

ஈதெல்லாம் கிடக்கட்டும்! சேதி கேளீர்! இவர்க்குள்ளே எத்தனேயோ, பிளவு, பேதம்! ஆளுக்கோர் திட்டம், மட்டம், அனியாயம், வெளியே தெரிந்தால் போதும்! இவருக்கு அவர்தான் மேல், அவருக்கு இவரே நிகர் என்றெல்லாம் எத்தனேயோ பேச்செல்லாம் எழுந்திட்டது அங்கே. இனி அவர்கள் ஒன்ருக இயங்கமாட்டார்! பிய்த்துக்கொண்டு ஓடுவார் பாரீர் என்று, பேயுள்ளம் கொண்டோர் பேசி வந்தார்.

பேச்சுகளில் எழுத்துகளில் பேதம் தேடி அலேகின்றீர் பித்தர்களே! கருத்துத் தோட்டம், ஓர் மலர்தான் இருக்கும் இடமாகாது; வண்ணப் பூ, வகை வகையாய் இருக்கும் ஆங்கே! சிரித்திடும் முல்லேக்கும் சிங்கார ரோஜாவுக்கும், பறித்தெடுக்காமலே பார்த்து மகிழத்தக்க பாங்கான தாமரைக்கும், பகைதான் என்று, பேசுவது அறிவீனம் அன்ருே. சேர்ந்து பணியாற்றிடும் காலே, செயல்முறைகள் பலப்பலவும் பேசிடல் வேண்டும்; சீற்றம் எழத்தக்க நிலேயும் வரலாம்; சிண்டு முடிந்திடுவோர் முந்திக்கொண்டு, மனத் தாங்கலாக்கி மகிழ்ச்சி வெறி கொள்வர்; எனினும், எமது

இலட்சியமாம், திராவிடநாடு திராவிடர்க்கு என்னும் பிணைப்பு, எமக்குள் முறிவுகளைத் தாராது காணீர் என்று சூளுரைத்துக் கழகம் வளர்ந்தது; சூதுமதியினருக்குக் கிலியூட்டிற்று.

உருட்டு விழி, மிரட்டும் பேச்சு கொண்டோரன்றோ. இவரால் ஊர்க்கலகம் மூளும், பிணமும் வீழும். பேச்சோடு நின்றிடும் பேர்வழிகளல்ல, பெரும் போர் மூட்டி, நாட்டை இரத்தக்களரியாக்கிப், பேயாட்டம் ஆடத்தான் படை சேர்க்கின்றனர்கள். அறவழியில் இவர் நின்று பணியாற்றுர்—அனைவருக்கும் ஆபத்துத் தேடும், பயமளிக்கும் பலாத்காரம் அவிழ்த்துவிட்டு, படுகளமாக்குவார், நாட்டை, பாரும் என்றுர்.

கொன்று குவித்துக் கொடி நாட்டிடும் கொடிய முறை எமதல்ல, கூறிவிட்டோம். கூர்வாள் ஏந்திக் குத்திக் குடலெடுக்க முனைந்தோமில்லை—எதிர்ப்படுவோர் எங்கிருந்தோ வந்த வேற்று நாட்டாரல்ல; விலங்கணிந்தும் உணராது உழலும் எமது உடன் பிறப்பாளர் அன்றோ அவர்களும்தான்; ஒருவருக்கொருவர் வெட்டிக்கொண்டு வீழும் அந்த வேட்டு முறை அல்ல, நாங்கள் கொண்ட முறை அறிவீர் என்று கூறி, குத்துக்கும் வெட்டுக்கும் ஆட்பட்டுக் குருதி கொட்டி, கொடிய செயலில் துளியும் இறங்காமல், கொள்கை கூறி, கண்ணீர்த்துளிகள் நாட்டின் கண்மணிகள் என்று பாராட்டும் நிலையினைக் கழகம் பெற்று, பாமரரும் பற்றுக் காட்டும் ஏற்றம் கொண்டது.

வேட்டுமுறை அல்லவோ உமது! பிழைத்தீர், பயல்காள்! இல்லையென்ருல், கூண்டோடு பிடித்தழித்துப் போட்டிருப்போம், தப்பிவிட்டீர். சரி, போகட்டும். வேட்டு முறை வேண்டாம் என்று கூறிவிட்டீர். வேறென்ன முறை உமக்கு? உண்டோ? கூறீர்! என்று காங்கிரசார் கேட்கலுற்ருர்.

வேட்டுமுறை ஆகாது; மரபுமல்ல என்பதனுல் அதை விடுத்தோம்; அஃதும் இன்று இக்கழகமதை நடாத்திச் செல்வோர், இம்முறை ஆகாது என்பதால், எழவில்லை. வேட்டு முறை தன்னுலன்றி வேறெதாலும் விடுதலையும் கிடைக்கப் போமோ என்று கேட்கும் வீரமிகு போக்கினர்க்குக் குறைவில்லை, அறிவீர் நன்றுய். பாசறைகள் அமைத்தும் பதுங்கிப் போர் செய்தும், வெடிகுண்டுகள் செய்தும், விரைந்து தாக்கிடும் வழி நடந்தும், வடவரின் ஆதீக்கத்தை அழித்தொழிக்கவேண்டும் என்று, விடுதலைப்போர் வரலாற்றுச் சுவடி காட்டும், சுவைமிக்க சேதிகளை நெஞ்சில்கொண்டு, செயல்புரியத் துடிதுடித்து நிற்போர்கள் அறவே இல்லை என்று எண்ணற்க. அவர்கள் இன்று, அந்த முறை ஆகாது என்றுகூறும், எண்ணத்தாரிடம் கழகம் இருக்கட்டும் சின்னுட்கள் என்று உள்ளார். எந்நாளில் அவரிடம் கழகம் சேரும் என்பதைக் கூறவல்லோர் அவருமல்ல; உமது ஆணவத்தின் போக்கே, அந்நாளை விரைவாகக்கொண்டுவந்து விடக்கூடும். அறப்போரிட்டு வெற்றிபெற விழைவோர்கள் கழகத்தை நடத்தும் பொறுப்பிலுள்ளார், இந்த உண்மையின் அருமையினை உணராமல், ஆணவத்தால் அடக்குமுறை அவிழ்த்துவிட அவிழ்த்துவிட, அழிவு முறையன்றி வேறென்று ஆகாது என்று ஆர்த்தெழுவர் பல்லோர்கள், அறிவீர். இன்று வேட்டுமுறை இல்லை, ஒட்டுமுறை மேற்கொண்டுள்ளோம் என்று அறிவித்திருக்கிறது நம் கழகம், ஆளவந்தார்க்கு.

ஓ! ஓ! ஓட்டு முறையோ; உமது! மெத்தச் சரி! களத்திலே காட்டுங்கள் கைவரிசை பார்ப்போம் என்று, காங்கிரசார் பெருங்கூச்சலிட்டார், சிரிப்பினூடே; தேர்தலிலே வல்லவர்கள் என்ற பட்டம், தேசத்தார் சூட்டிவிட்டார் என்பதாலே. தேர்தலிலே நிற்பாராம், கேளீர் ஐயா! தெருமுனையில் பேசுவர், கேட்பர், மக்கள். பொழுதுபோக்குப்பல உண்டு, இவர்கள் தருவதுபேச்சுக் கச்சேரியன்றோ! இதனைக் கண்டு, மதிமயங்கிப் போனதாலே, இவர்கள் பாரும், தேர்தலிலே நிற்பராம்! ஐயோ பாபம்! தூள் தூளாகிப்போவர், பின்னர், கழகம் இருந்த இடம் புல் முளைத்துப்போகும். சரியான அடி கொடுத்துத் தரைமட்டமாக்கிடவே வந்தது சமயம், ஜெய்இந்த் என்று கொக்கரித்துக் கிளம்பினர் கோலேந்திகள், புதிய தெம்புடன்.

எப்புறமும் இத்திறத்தார் எதிர்த்தகாலை, எதைக் கண்டு இவர்கள் துணிவு பெற்றுர் என்று அவரெல்லாம் ஏங்கும் வண்ணம், தேர்தலிலே கழகமும் ஈடுபட்டு, நாடெங்கும் நல்ல பிரசாரம் நடாத்தி, வீடெங்கும் கழகம்பற்றிப் பேசுவோர்கள் கூடக்கண்டு, விறுவிறுப்பாய்ப் பணியாற்றி வெற்றிதேடப் பாடுபட முனைந்தது. அந்த நாளில் எவர் கலைஞர் எவர் வழக்கறிஞர், என்ற பேச்சு எழவே இல்லை. கலையுலகில் இருந்த இராஜேந்திரன் தானும், கடும் எதிர்ப்பு மூண்ட தேனி களத்தில் நின்று போட்டியிட்டார். மற்றக் கலைஞரெலாம், நாளெல்லாம் சுற்றிச்சுற்றி, கழக வெற்றிக்கு உழைத்தார். ஓட்டுப் பெறுவதென்பது விளையாட்டல்ல; ஒன்றல்ல இரண்டல்ல நாங்கள் கண்ட தேர்தல்; மன்னுதி மன்னனெல்லாம் மண் கவ்வச் செய்தவர்கள்; எம்மை இந்த மரப்பாச்சிகளோ எதிர்த்து வெற்றிகொளப் போகிருர்; கதை எழுதும் கருணுநிதியும், கவிபாடும் கண்ணதாசனும், படக்காட்சிகட்குக் கதை எழுதிடும் அண்ணுத்துரையும், எமை எதிர்த்து நிற்கப்போமோ என்றெல்லாம் ஏசிவந்தார் இறுமாப்பு மிகக்கொண்டோர்; மக்களோ, சீராட்டி வரவேற்று, நமக்குப் பரிந்து வாக்களித்தார்; பதினேழு இலட்சம் வாக்குகளை நம் கழகம் பெற்றது; ஆட்சிமன்றம் சென்றமர்ந்தனர் நம்மவர்.

எப்படியோ பெற்றுவிட்டார் வெற்றி, அதனுல் என்ன? எம்மிடமன்றோ ஆட்சி! இதுகள் பாரீர், எம்மெதிரே இளித்துக் கிடக்கும் காட்சி. எவரெவரோ எமை எதிர்த்தார், இன்று அவரெல்லாம், ஏங்கித் தவம் இருந்து எமது அருள் வேண்டுகின்ருர்!

பக்குவமில்லாதார், பாலபருவம் அரசியலில், பாகு தெளித்த மொழி பேசினாலே போதும், பாதம் பணிந்திடுவார்; சில நூறு ரூபாய்கள் பெறவல்ல வேலையோ, பல ஆயிரம் தரும் வியாபார அனுமதியோ, ஏதேனும் சுவை, இலாபம், காட்டினால் போதும், கழகம் கலைத்துவிட்டு, எம் கால் வீழ்ந்து கிடப்பார்கள்; உழைப்பாளிக் கட்சி உருக்குலைந்துபோன கதை உலகறியுமன்றோ! பொது நலக் கட்சிதானும், போதும் ‘கடை’ என்று கூறி, எம்மிடம் அடைக்கலம் ஆகிவிட்ட, ‘சேதி’ அறியீரோ? பொறுத்திருந்து பாரும், இதுகள் போக்குப் புரிந்துவிடும் என்றுரைத்து வந்தார், கேட்போர் எரிச்சலடையும் வண்ணம்.

கழகத் தோழர்களோ, ஆட்சிமன்றம் அமர்ந்தாலும்ஆளடிமையாகாது, கொள்கை பிறழாது, நோக்கம் மாறாது, திருஇடத்தின் விடுதலைக்குப் பாடுபட, போர்முனைகள் பல உண்டு, அதிலே இஃதொன்று; இங்கு வந்து அமர்ந்ததனால், இல்லை இனி வேலை என்று எவர் எண்ணிக்கொண்டாலும், ஏமாளியே அவர்கள், என்று கூறிவிட்டு, மேலும் சுறுசுறுப்பாய், நாடு சுற்றி நடத்தி வந்தார், நம் நாட்டு விடுதலைக்கு, போரார்வம் வளர்ந்திடவும், புத்தார்வம் பூத்திடவும். பெர்மிட்டு, லைசென்சு, காண்ட்ராக்ட், கையூட்டு, என்று பல உண்டு, அறமழிக்கும் முறைகள். இன்றுவரை எவரும், நம் தோழர் குறித்து, எந்த ‘மாசுமருவும்’ எடுத்துக்கூற இயலாமல், தூய பணியாற்றித் தோழர்கள் வருகின்றார்.

# அங்கும் இங்கும்!

— பூங்குன்றன் —

அழைப்பிருக்குது அங்கே
உழைப்பிருக்குது இங்கே:
தொடர்பிருக்குது அங்கே
தொழிலிருக்குது இங்கே:
நினைவிருக்குது அங்கே
கனவிருக்குது இங்கே:
விழியிருக்குது அங்கே
மொழியிருக்குது இங்கே:
காதலிருக்குது அங்கே
கடமையிருக்குது இங்கே:
வீடிருக்குது அங்கே
நாடிருக்குது இங்கே:
நெஞ்சிருப்பது எங்கே
நீயிருப்பதும் அங்கே!

தீர்ந்ததப்பா, தீப்பொறி கொட்டும் வேலை! இனி, திண்டுதனில் சாய்ந்து சில பேசிக் கிடப்பார்கள். போராற்றல் இனி இல்லை; நெஞ்சம் துருப்பிடித்துப் போன நிலை. முழக்கமிட்டு வந்ததெலாம் இந்த இடம் பிடிக்கத்தான், அதனால் இனி இவர்கள் ஒடுங்கிக் கிடப்பார்கள், என்று பேசி மகிழ்ந்தார், நீறுபூத்த நெருப்பாகிக் கழகம் இருக்கும் நிலை உணராதார்.

அதுவும் தவறென்று காட்டுவதற்கான வாய்ப்புக் கிடைத்திட்ட போதெல்லாம், கிளர்ந்தெழுந்து நின்றார்கள், கழகத்துத் தோழர்கள். கருப்புக் கொடி காட்டும் நிகழ்ச்சியே ஓர் காவியம்போல், வடிவெடுத்தது, நம் கழகத் தோழர்களின் வீரத்தின் விளைவாக. இந்தி வந்துவிடும் என்ற நிலை பிறந்தஉடன், எங்கே? எங்கே? என்று ஆர்த்தெழுந்தனர், வீரர். வீரம் குன்றிவிடும், இயல்பே மாறிவிடும், சட்டமன்றம் சென்றதனால் என்றன்றோ நாமெண்ணி, ஏமாந்து போயிருந்தோம், இந்தக் கழகத்தாரோ இம்மியும் வீரமதை இழந்திடக் காணோமே! ஏதேது இவர் போக்கு, அதிசயமாய் இருக்குதென்று, மாற்றார்கள் மனம் மருளும் நிலை எழ உழைக்கலானோம்.

அழிந்துபடத்தக்க நிலை பலவும் தாண்டிவிட்டார், அடித்துக்கொண்டு சாவர் என்றிருந்தோம், பிழைத்துக் கொண்டார்; இடம் பிடிக்க இவர்க்குள்ளே எழும் பூசல் என்றிருந்தோம், எப்படியோ எதனையும் இலகுவாகத் தீர்த்துக்கொண்டு, ஏறுநடை போடுகின்றார். இன்னும் எத்தனை நாள்? எதுவரையில் இந்நிலைமை? எப்போது பிளவு வரும்? என்று நோட்டமிட்டு, வட்டமிட்டபடி, கழுகு, பிணம் வீழாதா என்றேங்கும்பான்மைபோல, சுற்றித் திரிகின்றார், மோப்பம் பிடித்தபடி. நம்மில் துளியேனும் பேதம் ஏற்பட்டால், சந்துகளில் நுழையும் சர்ப்பம் போலாகிவிட, சந்தர்ப்பம் பார்த்தபடி இருக்கின்றார், மாற்றார்கள்; இன்று இவர்க்கு இருக்கும் வலிவுக்குக் காரணமே, இவர்க்குள்ளே இருக்கின்ற, பாசம்தான், வேறில்லை; எப்பாடுபட்டேனும் இப்பாசம்தனை ஒழித்தால், பிறகு, சாந்து அழிந்த சுவர், சரிந்துபோவது போல், இவர்கள் அணிவகுப்பு, அழிந்துபோகும், நிச்சயமாய்; எனவே, இம்முனையில் இறங்கி வேலை செய்தால், வெற்றி நிச்சயம் காண் என்று வெறிகொண்டு, மாற்றார் உலவுகின்றார், மரபு அழிக்கத் துடிக்கின்றார். புத்தம் புதுப் பிரச்சினையோ, பழங்காலப் பிரச்சினையோ, தத்துவம் கிளப்புகின்ற பூசலோ புகையோ. நராம் என்ன என்று கேட்கும் தத்தளிப்போ, ஏதோவொன்று, இன்று நமக்குக் கிட்டாதா? எடுத்ததனைப் பெரிதாக்கி, ஊருக்கெல்லாம் காட்டி உருவழிக்க முயல்வேனே! வருகிறதே பொதுத் தேர்தல், வளருகிறதே கழகம்!! மேலிடத்தார் கேட்கின்றார், என்னதான் செய்கின்றீர்? இவ்வளவுதானோ திறமை? என்றெல்லாம். எனவே, ஏதேனும் செய்து இவர்தம் ஒற்றுமையைக் குலைத்து

விட, நாளும் வழிதேடி, நாமிருக்க வேண்டுமென்று, நாடாளும் நிலை இழக்க நேரிடுமோ என்பதனுல் நடுக் குற்றுக் கிடக்கும், காங்கிரசார் எண்ணுகின்றுர். நாம், கழகத்தின் வடிவம் மாற்றிட முனைந்தாலும், கட்டுப் பாடு ஒழுங்கு காத்திடப் பணி புரிந்தாலும், செம்மைப் படுத்த செயல்முறை புதிதாய் வகுத்தாலும், எவ ரெவர்க்கு என்ன இடம்? எவரெவர்க்கு என்ன பணி? எவ ரெவர் தொண்டாற்றி ஏற்றம் அளிப்பவர்கள்; எம்முறை யில் உள்ளோரைத் தலைமை இருக்கைக்கு ஏற்பது எனும், எதுபற்றி முயன்றுலும், மூச்சைச் சூருவளி என்ருக்கி, பேச்சைப் பெரும்புயல் என்ருக்கி, நமக்குள் பேதத்தை வளர்த்துவிட்டு, பெரும் பிளவு உண்டாக்கி, உடைத்துக் காட்டிவிட்டு, ஊராள்வோர் உட்கார்ந்து, ஓஹோ! பார்த்தீரா? பன்னிரண்டு ஆண்டுகளாய், பயல் கள் இறுமாந்திருந்தார்; பலப்பல முயற்சிகளைப் பக்குவ மாய் முறியடித்தார், என்றுலும் இறுதியிலே, உடைத் தெறிந்தோம் அவர் அமைப்பை; சிதறியது கண்டவர் கள், கண்ணீர் சிந்திக்கிடக்கின்றுர்; இனி இதுபோல் ஓர் அமைப்பு, எவர் முயன்று ஆக்கிடுவார்; பயமின்றி நாமினிமேல் வாழ்ந்திடலாம், என்று பாடிடவும் ஆடிட வும், ஆவலுடன் உள்ளார்கள் மாற்றுர்கள்.

இதை அறிந்து, நாம் நடந்துவந்த அந்த நீள் வழியையும் நினைந்து, எதிர்ப்பட்ட ஆபத்தை எத்திறத் தால் வென்ருேம், ஏளனப் பேச்செல்லாம் எவரெவர் கூறி நின்றுர், என்னென்ன பேச்செல்லாம் மாற்றுர் உரைத்தார்கள்—சின்னப் பிள்ளைகள் என்றுர், சினிமாக் கட்சி என்றுர், கூத்தாடும் கும்பல் என்றுர், தடிகண்டால் ஓடும் என்றுர், சுகபோகம் தேடிட்வே சூது நடத்துவோர் என்றுர், குடும்பத்திலுள்ளாரைக் குறைகூறுதும் இருக்க வில்லை; என்னென்ன ஏச்சுக்கள்; எவரெவரின் இழி மொழிகள்; இவனுக்கு இந்த வாழ்வு எப்படி வந்ததென்ற கேள்விகள், கேலிகள்; அடுக்கடுக்காய் அத்தனையும் ஆண்டுபல கேட்டோம்; இதயத்துக்கு வீழ்ந்த அடி ஒன்றல்ல இரண்டல்ல; எதையும் தாங்கியது, எற்றுக்கு என்பதனை எண்ணிப் பார்ப்போருக்கு, இன்று எழுந் துள்ள நிலைமையினை உணர்ந்து தெளிவுபெற இயலும். எதிர்வீட்டுப் பலகணியை எட்டிப்பார்க்கும் போக்கு, நல்லது அல்ல; தீது! ஆனுல், மாற்றுர்க்கு இன்று அதுவே, பொழுதுபோக்கு!! இலாபமும் அதில் அவர்க்கு உண்டு! நாம் இன்று, எண்ணிப்பார்க்கவேண்டியது ஒன்று உண்டு. கழகத்துக்குப் பெரும் விபத்து வந்து விட்டது என்று கூறித் திரியும் காங்கிரசாரின் பேச்சி லிருந்து நாம் என்ன பாடம் தெரிந்துகொள்ள வேண்டும்?

உள்ளூர்க் காங்கிரஸ் கமிட்டியிலிருந்து, உச்சக் கட்டம் வரையிலே, 'கோஷ்டிகள்' உள்ளன, என்று நேரு பண்டிதர் கூறுகிருர்; வருந்துகிருர்.

வீட்டுக்குள்ளே ஏற்பட்டுவிடும் 'விரசமான' விஷயத்தை வெளியே சென்று பேசாதீர்கள் என்று காங்கிரஸ் தலைவர் தாக்கீது பிறப்பித்துள்ளார்.

காலக்கோடுகள் வீழ்ந்து வீழ்ந்து, நரை திரை மேலிட்டுள்ள பருவத்தில் உள்ளது காங்கிரஸ் கட்சி— அந்தக் கட்சியிலேயே 'கோஷ்டிகள்' கூடாது, அது ஆபத்து, என்று உணரப்பட்டு வருகிறது.

தத்துவப் பூசல்கள் என்று எடுத்துக்கொண்டால், கூட்டுப்பண்ணையிலிருந்து கூடிவாழும் கொள்கை வரை யிலே, இரண்டு காங்கிரஸ்காரர்கள் ஒருமித்த கருத்துக் கொண்டில்லை. ஆனுல் இன்று; நம்முடைய வீட்டு விவ காரம்தான், பருந்து அடித்துக்கொண்டு வந்து கீழே வீழ்ந்த பழத்தைக் காக்கைகள் கொத்திக்கொண்டு கிடக்கும் நிலைமைக்குக் கொண்டுவரப்படுகிறது. சரியா? முறையா? 1961-ஆம் ஆண்டுக்கென்று, நாம் அரும்பாடுபட்டுத் தேடிக்கொள்ளும் திட்டம் இது தானு?

தம்பி! எண்ணிப்பார்த்து, எமக்கு நல்வழி காட்டு.

அண்ணன்,

அண்ணாதுரை



# இனித் துஞ்சிடோம்!

— பழநி —

**கனகு**

காலை 9 மணி. சைனு பசார் இப்போதுதான், கண்களைக் கசக்கி விட்டபடி,நெட்டி முறித்துக்கொண்டு எழுந்தது. அங்கொன்றும், இங்கொன்றுமாகச் சில ஊர்திகள் போய்க்கொண்டிருந்தன. இரவில் நடைமேடையைத் தங்கள் இருப்பிடமாகப் பயன்படுத்திவந்த அந்த வட்டாரத்து உழைப்பாளர்கள், தொழிலாளர்கள் தங்கள் சொத்துச் சுதந்திரங்களை—கிழிந்த பாய்கள், கந்தற் கோணிகள், உடைந்த சட்டிகள், நெளிந்த குவளைகள், நைந்துபோன துணிகள் இவற்றை—மூட்டை கட்டிக்கொண்டு, குழந்தை குட்டிகளைத் தூக்கிக்கொண்டு, அழைத்துக்கொண்டு நிழல் சரிவுகள், சந்து, பொந்துகள் நோக்கி நடையைக் கட்டிக்கொண்டிருந்தார்கள்.

அந்தக் காலை வேளையிலும் பிராட்வே நாற்சந்தியருகில், புதுப் புதுச் செய்திகளைச் சுடச்சுட வெளிப்படுத்தியபடி பரப்பிக் கிடக்கும் செய்தித் தாள்களைச் சுற்றி மனித ஈக்கள் மொய்த்துக்கொண்டிருந்தன. அங்கே, புத்தகக் கடைக்கு எதிரில், நடைபாதையின் மருங்கில் கட்டப்பட்டிருக்கும் சிமிண்டுத் தடுப்பின் மீது ஒரு காலை ஊன்றிக்கொண்டு மாசிலாமணி நின்றிருந்தான். அவன் கையில் சுமந்துகொண்டு திரியும் அந்தக் கனமான தோற்பையையும் சிமிண்டுத் தடுப்பின்மீது வைத்தபடி பிடித்துக்கொண்டிருந்தான்.

அவன் பார்வை, அந்த நாற்சந்தியின்மீது படியவில்லை. பின்னுல் உள்ள செய்தித்தாள்; கடையின் சலசலப்பும் அவன் கவனத்தை ஈர்க்கவில்லை. எதிரிலிருக்கும் சைனு பாசாரைப்பற்றி அவன் சட்டையே செய்யவில்லை. அவன் எண்ணமும் பார்வையும் பக்கவாட்டில் படிந்து கிடந்தன. அதுவும் அண்ணுமலை மன்றத்திற்கும், வெளியூர் பேருந்தி நிலைய வாயிலுக்கும் இடையில் உள்ள இரண்டு மூன்று பெரிய, உயர்ந்த கட்டிடங்களையே சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக்கொண்டிருந்தன.

அந்த வட்டாரம் வழக்கமாகப் பதினெரு மணிக்குத்தான் இயங்கத் தொடங்கும். அதுவரை அவன் அந்தநாற்சந்தியிலேயே காத்திருக்க வேண்டியதுதானு? எல்லாரும் 'மணியாகிவிட்டதே, மணியாகிவிட்டதே' என்று தங்கள்தங்கள் இல்லங்களில் அவசர அவசரமாக எதை எதையோ செய்துகொண்டும், வழியில் நடந்து வந்துகொண்டும், விரைந்துகொண்டும் இருக்கக்கூடிய அந்த வேளையில், அவன் 'மணியாகவில்லையே, மணியாகவில்லையே' என்று துடித்துக்கொண்டிருந்தான். அடிக்கொரு தடவை கழுத்தை நீட்டி, வளைத்து மணியைப் பார்த்துக்கொண்டான்—சற்றுத் தொலைவிலுள்ள மணிக் கூண்டுப்பக்கமாகத் திரும்பி.

இது நாலாவது நாள் — அங்கே அவன் இப்படிக் காத்துக்கொண்டு நிற்பது. நின்று நின்று கால்கடுக்கத் தொடங்கியது. வெயில் ஏறிக் கொண்டு வந்தது. இன்னும் பதினெரு மணியாகவில்லை.

அந்த நாற்சந்தியில், கூட்டமும், சந்தடியும், நெருக்கடியும் பெருகி விட்டன. அவை எப்போது பெருகின? எப்படிப் பெருகின? அவனுல் எண்ணிப்பார்க்க முடியவில்லை. அவ்வளவு விரைந்து பெருகிவிட்டன. அவனுக்குத் தாகம் எடுத்தது. ஒரு கப் காபி குடித்தால் நன்ருக இருக்கும் போல் தோன்றியது. 'காப்பிக்குப் பதினைந்து காசுகள் வைக்க வேண்டுமே! பக்கத்துக் 'காக்கா' ஓட்டலிற்போய் ஸ்ட்ராங் டீ ஒன்று குடித்துவிட்டு வரலாம்.' அவன் திரும்பினுன். எதேச்சையாக அவன் பார்வை, ஒருகாலைத் தரையில் ஊன்றியபடி மிதிவண்டிமீது அமர்ந்தவாறே — போக்குவரத்து ஒழுங்குக்காக—அதை நிறுத்தி வைத்துக் கொண்டிருந்த ஒருவர்மீது விழுந்தது. ஆமாம், அவர்தான் 'அப்பா அன்ட் அப்பா கம்பெனி'யில் 'ஸ்டேஷனரி' கணக்கர் சம்பந்தம்.

"சார்... சார்..."

இரண்டாவது குரலுக்கு — கூவலுக்கு—சம்பந்தம் திரும்பிப் பார்த்தார்.

"ஓ!—என்னய்யா, விடியற்காத்தாலேயே வந்துவிட்டீரா?"

"இப்போது மணி பத்தேகால் சார்."

"அலுவலகம் பதினெரு மணிக்குத்தானே!"

"நீங்கள் சொன்னது இன்னிக்கு ஆகுமில்லே? உங்களைத்தான் சார் நம்பிக்கொண்டிருக்கிறேன்"

"அலுவலகத்துக்கு வாரும் பார்க்கலாம்!"

"இல்லை சார், நீங்கள் மனசு வெச்சால் அந்தப் பல்க் (பெரிய) ஆர்டர் எனக்கே கிடைக்கலாம் சார்!"

சம்பந்தம் சுற்றுமுற்றும் பார்த்தார்.

"அட என்னய்யா நீர், வியாபார தந்திரம் தெரியாத ஆளாக இருக்கிறீர்! நடுத்தெருவிலேயே பேரம் பேசுகின்றீரே! எவனுவது தெரிந்தவன் காதிலே விழுந்துவிடப் போகுதய்யா!"

"அலுவலகத்துக்கு வருகிறேன்........" என்று கெஞ்சுங்குரலிலே மேலும் எதையோ சொல்ல வாயெடுத்தான் மாசிலாமணி. அதற்குள் 'போகலாம்' என்ற குறி காட்டப்பட்டுவிட்டது. சம்பந்தம் மிதிவண்டியை இயக்கிக்கொண்டு கிளம்பிவிட்டார்.

சரியாகப் பதினொரு மணி அடித்தது. கையில் பிடித்திருக்கும் கனமான தோற்பை பின்னும் கனக்க, அதனைச் சுமந்துகொண்டு, அந்தப் பெரிய கட்டிடத்தை நோக்கி நடந்தான் மாசிலாமணி. வளைந்து வளைந்து செல்லும் பல படிக்கட்டுகளை ஏறிக் கடந்து, கட்டிடத்தின் கடைசி அடுக்கினை அடைந்தான் அவன். அந்த அடுக்கின் ஒருபிரிவில் தான் அப்பா அண்ட் அப்பா அலுவலகம் இருக்கிறது.

அவன் தன் முகவரி அட்டையை வெளியில் நின்ற ஊழியரிடம் கொடுத்துவிட்டு, அங்கிருந்த விசுப் பலகையில் சற்று அமர்ந்தான். அப்பாடா! சரியாக ஐந்துமணி நேரம் நின்றுகொண்டும், நடந்துகொண்டும் இருந்தவன் இப்போதுதான் சற்று அமர்ந்தான்.

அவ்வேளை 'டக்டக்' என்று பூட்சுகள் ஒலிக்க ஒருவன் அங்கு வந்தான். அவன் ஒரு மார்வாரி. ஆரவாரமான உடையும், கெடுபிடியான தோற்றமும் உடையவன். அவன் வெளியில் நிற்கவில்லை. 'விர்' என்று நடந்தான் அலுவலகத் தலைவர் அறை நோக்கி. வழியில் நின்ற கடைநிலை ஊழியர் அவனுக்கு வழிகாட்டி ஒதுங்கி நின்றார். அவனிடம் அவர் முகவரிச் சீட்டுக் கேட்கவில்லை. உள்ளே நின்ற பிறிதொரு ஊழியர் மார்வாரிக்காரனின் குறிப்பை உணர்ந்துகொண்டவர் போல், அவன் போகவேண்டிய இடத்துக்கு வழிகாட்டிக்கொண்டு முன்னே நடந்துபோனார். மார்வாரி எல்லார்மீதும், எல்லாவற்றின்மீதும் தன் அலட்சியப் பார்வையை ஓடவிட்டபடி உள்ளே சென்றான்.

மாசிலாமணி வெளியில் அமர்ந்திருந்தான். இன்னும் அவனுக்கு அழைப்பு வரவில்லை. அவனுக்குத் தெரியும் அழைப்பு இல்லாமல் உள்ளே நுழைந்தால், கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிடுவார்கள் அவனைப் போன்றவர்களை என்று. நெடுநேரத்திற்குப் பிறகு சம்பந்தத்திடமிருந்து அழைப்பு வந்தது. மாசிலாமணி உள்ளே சென்றான்.

"உங்கள் கம்பெனியின் பெயர் என்ன?" என்று, போனதும் வினவினார் சம்பந்தம்.

மாசிலாமணி, தான்பணியாற்றும் கம்பெனியின் பெயரைப் பல முறை சொல்லி இருக்கிறான். இருந்தும் திரும்பவும் கேட்டார் சம்பந்தம். அது ஏனோ!

"என் முகவரிச் சீட்டில் இருக்கின்றதே" என்று சட்டைப்பையிலிருந்து புதிய முகவரிச்சீட்டு ஒன்றை எடுத்து நீட்டினான் மாசிலாமணி.

"ஓ, தாயுமானவர் நிலையமா? சென்ற தடவைகூட உங்கள் கம்பெனிதானே எங்களுக்கு அலுவலகச் சாமான்கள் வழங்கி இருக்கின்றது. நீர்தான் புதிய ஆள்—சரி, எங்கள் ஆர்டர் முழுதும் உங்களுக்குத்தான் கிடைக்கும்" என்றார் சம்பந்தம்.

மாசிலாமணிக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை.

"இந்தத்தடவை ஆர்டர் எவ்வளவு சார்?"

"எல்லாம் சேர்த்து ஐயாயிரத்துக்குமேல் ஆகும். ஆனால் விலை—நீங்கள் பார்த்துப் போடவேண்டும். இப்போதெல்லாம் இங்கே உள்ள கம்பெனிக்காரர்களைவிட பாம்பேக்காரர்கள் விலை மலிவாகத் தருகிறார்கள். இப்போதுகூடத் தலைமையாளர் அறையில் பாம்பே கம்பெனிக்காரன் ஒருவன் வந்து பேசிக்கொண்டிருக்கிறான். அவன் கொடுக்கும் விலையைவிட உங்கள் விலை குறைவாக இல்லாவிட்டாலும், அதிகமாக இருக்கக்கூடாது" என்று தேவைப்படும் பொருள்களின் பட்டியல் ஒன்றை எடுத்து நீட்டி மாதிரியும், விலைவரமும் கேட்டார் சம்பந்தம்.

மாசிலாமணி அந்தப் பட்டியலைக் கையில் வாங்கிக்கொண்டான். விலை விவரத்தோடு மாதிரிப் பொருள்களும் எடுத்துக்கொண்டு பிற்பகல் வருவதாகக் கூறிவிட்டு அவன்கிளம்பினான்.

முதல் முதல் பெரியதொரு தொகைக்கு அன்றுதான் ஆர்டர் பெறுகிறான் மாசிலாமணி. என்றுமில்லாத மகிழ்ச்சி அவனுக்கு. பல நாட்கள் அலைந்தமைக்கு, பல நாட்கள் கால்கடுக்க நின்றமைக்கு எல்லாமாகச் சேர்த்து அன்று பலன் கிட்டப்போகிறது. அதுவரை அவனைக் கண்டதும் ஏளனப் பார்வையை அவன்மீதுவீசி, எடுத்தெறிந்து பேசும் கம்பெனி முதலாளி அன்று அவனைப் பாராட்டாவிட்டாலும் ஏளனமாகப் பார்க்கமாட்டார் என்று எண்ணியபோது அவன் மதிப்பு என்றுமில்லாதபடி உயர்ந்துவிட்டதாக அவன் தனக்குத்தானே கற்பனை செய்துகொண்டான்.

பிற்பகல் மாசிலாமணி சென்றான் அப்பா அன்ட் அப்பா அலுவலகத்துக்கு — தேவைப்பட்ட மாதிரிப் பொருள்களோடும் விலைவிவரங்களோடும்.

வழக்கம்போல் வெளியில் சிறிது நேரம் காத்திருந்தான். பிறகு தலைமையாளர் அறைக்கு அவன் அழைக்கப்பட்டான். அங்கே சம்பந்தமும் இருந்தார். ஆனால், காலையில் தென்பட்ட களை — மகிழ்ச்சிக்குறி அப்போது அவர் முகத்தில் இல்லை. ஏன் அந்தநிலை என்று மாசிலாமணியால் உணர்ந்துகொள்ள முடியவில்லை. சற்றுநேரம் அங்கே அமைதி நிலவியது. அந்த அமைதியில் மறைந்துகிடக்கும் புதிர் என்னவாக இருக்குமோ என்று துணுக்குறத் தொடங்கினான் மாசிலாமணி.

தலைமையாளர் மாசிலாமணியை நிமிர்ந்து பார்த்தார். அவன் நின்று

## கோமதியும் மதனும்

*17-வது நூற்றுண்டின் தலைசிறந்த டாஜிக் கவிஞர் பெதில் எழுதிய "கோமதியும் மதனும்" என்னும் எழுல்மிக்கக் கவிதை, இசைக்கெனவே பிறப்பிக்கப்பட்டதுபோன்று தோன்றுகின்றது. மனித ஆன்மாவின் எழிலைப்போற்றும் கவிதை இது.*

*இந்தக் கவிதை நாட்டிய நங்கை கோமதியையும் பாடகன் மதனையும் பற்றிய காதல் கதையைக் கூறுகிறது. இதை சோவியத் இசைவாணர்கள் ஓர் இசை நாடகமாகத் தயாரித்துள்ளனர்.*

*எ. டெக்கோந்தி என்பவர் இசை நாடகத்திற்கான வசனத்தை எழுதினார். இஜட். ஷாக்கிதி என்பவர் இதற்கான இசையை அமைத்துத் தந்துள்ளார். ஜி. வாலாமாத்ஜாதே அவர்கள் ஜன் ஒபேரா. பாலே தியேட்டரில் இந்நாடகத்தை அரங்கேற்றம் செய்தார். ஸ்டாலினாபாத் மக்கள் இதற்கு அமோக வரவேற்பு அளித்தனர்.*

கொண்டிருந்தான். அவனிடம் எதையோ தேடுபவர்போல் அவன் முகத்தை உற்று நோக்கினர். பிறகு எதிரிலிருக்கும் நாற்காலியைச் சுட்டிக்காட்டி அதன்மீது அமர்ந்துகொள்ளுமாறு சொன்னர்.

மாசிலாமணி தன் கையிலிருந்த விலைப் பட்டியலை அந்தத் தலைமையாளரிடம் கொடுத்தான். மாதிரிப் பொருள்களை மேசைமீது பரப்பி வைத்தான். பிறகு தலைமையாளர் சுட்டிக்காட்டிய நாற்காலியில் அமர்ந்துகொண்டான்.

தலைமையாளர் ஒருமுறை பட்டியலைப் பார்த்தார். பிறகு அங்கிருந்த மாதிரிப் பொருள்கள் ஒவ்வொன்றையும் எடுத்துப்பார்த்தார். பின்னர் மாசிலாமணியின் முகத்தை ஏறிட்டு நோக்கினர் — எதையோ சொல்ல விழைபவர்போல். வார்த்தை வரவில்லைபோலும். தொண்டையைக் கனைத்துச் சரிப்படுத்திக்கொண்டார்.

"தாயுமானவர் நிலையத்திலிருந்து தானே வருகின்றீர்கள்?" என்று கேட்டார் அவர்.

"ஆமாம், சென்றதடவைகூட நாங்கள்தான் உங்களுக்கு அலுவலகப் பொருள்கள் வழங்கி இருக்கிறோம்" என்றான் மாசிலாமணி.

"உங்கள் பெயர் என்ன?"

"மாசிலாமணி!"

"மாசிலாமணியா!"— வியப்படைபவர்போல் கூறிவிட்டு அவனை ஏற இறங்கப் பார்த்தபடி மௌனமானர் தலைமையாளர். மறுபடியும் சற்று அமைதி.

"இந்த ஆர்டரை உங்களிடம் தான் கொடுக்கவேண்டும் நியாயமாகப் பார்த்தால். ஆனால், இதிலே ஒரு சிக்கல்..."

'என்ன சிக்கல்' என்று மாசிலாமணி கேட்கவில்லை. கேட்க முடியவில்லை. அப்படியொரு சிக்கலை அவன் எதிர்பார்க்கவில்லை. அவன் நெஞ்சப் பதிவை ஏதோ ஒன்று பிடித்து அழுத்துவதுபோல் தோன்றியது.

திரும்பவும் ஒருமுறை அந்தத் தலைமையாளர் தொண்டையைக் கனைத்துச் சரிபடுத்திக்கொண்டார்.

"நிலைமையை உங்களிடம் விளக்கிச் சொல்லவேண்டும் என்பதற்காக, மிகவும் நுணுக்கமான, வியாபார இரகசியம் நிறைந்த செய்தியொன்றை உங்களிடம் வெளியிடுகிறேன்." என்று முன்னுரை கூறிக்கொண்டு பேசத் தொடங்கினர் அவர்:

"எங்கள் கம்பெனிக்குச் சென்ற ஆண்டு வரை சில முக்கியமான மூலப்பொருட்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்துகொண்டிருந்தோம். இந்த ஆண்டு, நாங்கள் எதிர்பாராத வகையில் இறக்குமதி உரிமை எங்களுக்கு வழங்கப்படவில்லை. அந்தப் பொருள்களோ மிகவும் முக்கியமானவை. அவற்றை நாங்கள் எப்படியாவது வாங்கி விற்பனைக்கு வைக்கவேண்டிய இன்றியமையாத நிலை. அவற்றிற்கான இறக்குமதி உரிமை ஒரே ஒரு ஆளிடம்தான் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த ஆள் நம் பகுதியைச் சேர்ந்தவன் அல்லன். அவன் வடக்கைச் சேர்ந்தவன்; ஒரு மார்வாரி—அந்தப் பொருள்களோ நமக்கு மிகவும் வேண்டியவை. அவற்றை நாம் வாங்குவதற்கு வேறு வழியும் கிடையாது. இந்த நிலையில் அந்த மார்வாரிக்காரனைவிட்டால், நமக்கு வேறு புகல் இல்லை. ஆகவே......"

தலைமையாளர் தம் பேச்சைத் தொடரத் தயங்குபவர்போல் நிறுத்தினர்.

'ஆகவே, ஆகவே?' என்று அதற்குள் பலமுறை மனத்துள் வினவிக் கொண்டுவிட்டான் மாசிலாமணி.

"அந்த மார்வாரிக்காரன் அலுவலகச் சாமான்களும் விற்பனை செய்கிருனும். அவன் பிடித்த பிடியாக ஆள் அனுப்பி இருக்கிருன் — அலுவலகச் சாமான்களையும் அவனிடமே தான் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று. நாங்கள்தான் என்ன செய்வோம்?... எனவே, இந்த ஆண்டு மட்டும் உங்களிடமிருந்து அந்தப் பொருள்களை வாங்கிக்கொள்ளும் நிலையில் நாங்கள் இல்லை. அடுத்த முறை பார்க்கலாம். மன்னிக்க வேண்டும்."

தலைமையாளரின் முகத்தில் வியர்வைஅரும்பிற்று. மாசிலாமணி இருக்குமிடம் தெரியாமல் மரக் கட்டைபோல் அமர்ந்திருந்தான். அரைமணி நேரம் வரை அங்கே என்ன நிகழ்கிறதென்று அவனல் உணர்ந்துகொள்ள முடியவில்லை.

தலைமையாளர் எழுந்து போய்விட்டார். சம்பந்தம் ஒருமுறை தம் அறைக்குப் போய்விட்டுத் திரும்பி வந்தார். மாசிலாமணி இன்னும் அங்கே உட்கார்ந்திருந்தான்.

அவனை எழச்செய்து, நடக்கச் செய்து, வெளியேறுமாறு செய்ய வேண்டியது சம்பந்தத்தின் வேலையாயிற்று.

அதோ மாசிலாமணி வெளியேறுகிருன் ஏமாற்றத்தோடு, தோல்வியோடு மாதிரிப் பொருள்களைத் திரும்பவும் சுமந்துகொண்டு. அதோ பளபளக்கும் புதிய ஊர்திபொன்று அந்தக் கட்டிடத்தின் எதிரில் வந்து நிற்கிறது. காலையில் அங்கு வந்த மார்வாரி அந்த ஊர்தியிலிருந்து இறங்குகிருன். பாருங்கள் அவன் ஆடம்பரத்தை! பாருங்கள் அவன் மிடுக்கு நடையை! பாருங்கள் அவன் குதூகலத்தை! பாருங்கள் அவன் வெற்றிப் புன்னகையை! ஆளுகையில் இருப்பதாகக் கூறுகின்ற பெரிய மனிதர்களே பாருங்கள்!

நீங்கள் துஞ்சினலும் துஞ்சுங்கள்! அஞ்சினலும் அஞ்சுங்கள்! ஆனல், அதோ, 'அந்நியர் தமக் கடிமையல்லவே!—நாம் அல்லவே!' என்று மக்கள்-இந்த அடிமைப்பட்ட நாட்டு மக்கள் கிளம்பிவிட்டதையும் சற்றே கண் திறந்து பார்த்துவிட்டுத் துஞ்சுங்கள், அஞ்சுங்கள்! 'இனித் துஞ்சிடோம்! அஞ்சிடோம்!' என்று அவர்கள் முழங்குவதையும் முடியுமானல் காது கொடுத்துக் கேளுங்கள். நெருங்கிவிட்டது—நாட்டுக்கு விடிவு!

★


திரு. கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்கள் பொன்னுரையுடன்.

**புதுவை வாணன்**

எழுதிய

**கடைசி முத்தம்** 37 பு. காசு.

**சிற்பங்கள் சிரிக்கின்றன.** 25 பு. காசு.

**கண்ணம்மாள் பதிப்பகம்**

திருப்பாப்புலியூர்.


4-ம் பக்கத் தொடர்ச்சி

ஞர்; இவன் மார்பிலோ, எரிச்சல் மூண்டது.

ஓடினான் மருந்து போடும் உத்தண்டன் குடிசைப்பக்கம்; அங்கு அவனும் இருந்ததாலே, கிடைத்தது பச்சிலை மருந்து; நோயும் குறைந்தது, ஆனால் அலுப்பு மேலிட்டது.

அதனால் தேனப்பன் அன்று அயர்ந்து தூங்குகிறான். அவன்பட்ட கஷ்டமெல்லாம் அறிந்ததனால் அவன் மனைவி, பசு கதறும் குரல் கேட்டுப், பதறிப்போனாள் எனினும், அவனை எழுப்பவில்லை; தானே எழுந்துபோய்த் தடவிக்கொடுத்துப் பார்த்தாள், தண்ணீர் வைத்துப் பார்த்தாள்; பசுவோ முன்பைவிட வலிகொண்டு துடிதுடித்துக் கிடந்தது. என்ன எண்ணமோ, கிட்டே வந்த கன்றை, நாவினால் தடவிற்று, கண்ணீரைப் பொழிந்தபடி.

அம்மா! என்றழைப்பேன், அலறி அருகே வருவதுதான், என் தாயின் வாடிக்கை; இன்று என்ன இது? என்தாயே, அம்மா! அம்மா! வென்று அழுதழுது அழைக்கின்றாளே. நான் என்ன கண்டேன், நானே சிறு கன்று! என்று எப்படிச் சொல்லும்–ஆனால் பார்வை, இதைத்தான் சொல்லிற்று.



“தாயே மகமாரி! தயை செய்ய வேணுமம்மா. வாயில்லா ஜீவன் இது, வதைபடுவது அழகா! நீதான் காப்பாற்றவேணும்” என்றுசாமியை வேண்டிக்கொண்டு, போய்ப்படுத்தாள், தேனப்பன் மனைவி.

கோழி கூவிற்று, படுக்கையில் இருந்தபடி கண்விழித்துப் பக்கம் படுத்திருந்த கணவனைப் பார்க்கலானாள். அங்கு அவன் இல்லை. அலறித் துடித்தெழுந்து, தோட்டப்புறம் சென்றாள், அங்கு தேனப்பன், தலையில் கைவைத்து, பசு எதிரில் உட்கார்ந்திருந்தான். நொப்பு, நுரை தள்ளி, பசுவும் இருக்கக்கண்டாள். குரலெடுத்துப் பார்த்துவிட்டுப், பசு குமுறிக்கிடக்கும் நிலை. தாயின் முகம் பார்த்துப்பார்த்தழுதபடி கன்று இருக்கக்கண்டான்.

“என்ன இது கண்றாவி! இப்படியே விட்டுவைத்தால், மோசம் போய்விடுவோம். கூட்டிவா, யாரையேனும்” என்று மனைவி கூறக்கேட்டுத் தேனப்பன் யோசித்தான்; முடிவு செய்தான்.

“கன்றைக் கவனித்துக்கொள்; கஷ்டத்தோடு கஷ்டமாகப் பசுவைக் கொண்டு சென்று காட்டுகிறேன் கோவிந்த டாக்டரிடம். சிந்திப் பசுவுக்கு சளி ஜுரம் வந்தபோது, எஜமான் அழைத்தார், இந்தக் கோவிந்தன்தான் வந்தார்; ஊசிபோட்டார், உடனே நோய் ஓடிப்போய்விட்டது. நானும் நமது பசுவை, அவரிடமே காட்டுகிறேன். மனிதருக்கு வருகின்ற நோய்களெல்லாம் இப்போது, மாடுகளுக்கும் வந்து தொலைக்குதென்று, கோவிந்த டாக்டர் சொன்னார் என்று கூறி, கயிற்றை அவிழ்த்தான், தேனப்பன்.

பசுவோ, ஒப்பவில்லை; மிச்சம் உள்ள வலிவைக் காட்டி, இழுத்தபடி இருக்கிறது. என் கன்று இங்கு இருக்க, ஏன் என்னை வாட்டுகின்றீர். மருந்துண்டு பயனும் ஏது, இரவு முழுவதும் வயிற்றினுள்ளே குடிகொண்ட நோயும் என்னைக் குற்றுயிராக்கிவிட்டது. கண் மூடும் வரையில், கன்றைக் காணலாம் இங்கிருந்தால்! ஆவி போகும் வரையில், நாவினால் நீவி நீவி, என் அன்பினை அளித்து மகிழ, நான் கன்றுடன் இருக்க வேண்டும்—மருந்துவமனை இழுத்துச் செல்லவேண்டாம்; என்று அந்தப் பசு எண்ணிற்று போலும். அதுதான், என்றைக்கும் இல்லாத முறையில் அன்று, முரட்டுத்தனமும் செய்து, முட்டவும் செய்தது.

தாயுடன் இவர்கள் ஏதோ மல்லுக்கு நிற்கிறார்கள்; நாம் இந்த நேரம் நம்மாலானது செய்வோம், என்று எண்ணியோ என்னவோ, கன்றும், அம்மா! அம்மா! என்று அழுதபடி, அருகே நின்ற தேனப்பனைக் காலால் உதைத்தது பலமாகத்தான்.

கோபத்தால் தேனப்பன் கன்றை ஓங்கி அறையப் போனான், “வேண்டாமப்பா! கன்று தாளாது கனமாக அடித்தால்” என்று சொல்லி அதற்குத் துணையாய் நின்றாள், சிறுமி வள்ளி.

தன் பக்கம் வந்த வள்ளியை நாவினால் தடவி நின்ற, கன்றினைக் கண்டு பசு கதற, அங்கு இருந்த நிலை, நெஞ்சிலே இரக்கம் உள்ள எவரையும் உருக்கும்.

தேனப்பன், இழுத்துச் சென்றான்; தெருவிலே கண்டோரெல்லாம், தேறுவது கடினம் என்றார்; இவன் தேம்பிடும் நிலையும் பெற்றான்.

கைராசி உள்ள டாக்டர், கோவிந்தன் என்பார், அதனால், எப்படியும் என் பசுவை அவர் காப்பாற்றிவிடுவார், என்று நம்பினான் நடுக்குற்றாலும்.

நாலைந்து வீடே மிச்சம்—பிறகு ஓர் சின்னத்தோட்டம் — தோட்டத்தை ஒட்டியேதான் முற்றமொன்றும் இருக்கிறது—டாக்டர், அங்குதான், வழக்கமாக, மாட்டுக்கு வைத்தியம் பார்ப்பார்.

சென்றான் தேனப்பன் அங்கே— டாக்டர் இல்லை.

ஏனப்பா என்று கேட்டான், டாக்டரின் வேலையாளை.

நேற்றே சென்றார் டாக்டர்! நெடும்பாளூர் மிட்டாதாரர் நேசமாய்வளர்க்கும் நாய்க்கு இவர் தந்த மருந்தினாலே, சுகமாகப் பிரசவமாச்சாம்–அதற்காக விருந்து அங்கே! என்று அவன் சேதி சொன்னான்; தேனப்பன் பசுவைப் பார்த்தான்; பசுவோ, எங்கெங்கும் தன் கன்று கண்டு, குரல் கொடுக்கலாயிற்று— ஆனால் ஒவ்வோர் முறையும் குரலில் ஒலி குறைந்து வருகிறது கண்டு, உடன் இருந்த வேலைக்காரன், நேர்த்தியான பசுதான் நேற்றே வந்திருந்தால், பிழைத்திருக்கும்! என்று சொல்லி, நீட்டுகிறான் சாவோலை. வார்த்தையாலே.

கெட்ட பேச்சுப் பேசாதே அப்பா! என்று, மனம் நொந்து தேனப்பன் கூறுகின்றான். பசுவோ, நிற்க முடியாமல், தரையில் சாய்ந்தது, தேனப்பன் அழுதான்.

ஆமாமாம், மோட்டார் சத்தம், அவர்தான், அவர்தான்! என்று அலறினான், மகிழ்ச்சியோடு, டாக்டர் வந்தார்; தேனப்பன் அவர் கால் தொட்டு, வார்த்தைகள் பேசாமலேயே, வீழ்ந்திருக்கும் பசுவினைக் காட்டுகின்றான்.

விழி ஆடுகிறதா என்று பார்க்கின்றார், டாக்டர்.

சிறிதளவு அசைவு இருக்கிறது, என்றாலும் ஒளி போய்க்கொண்டே இருக்கிறது.

நேற்றிரவு முழுவதும் கத்திக் கத்தி......என்று சேதி சொல்ல வந்த தேனப்பனைத் தடுத்து, டாக்டர் சொன்னார், வயிறு உப்பிப் போனதுதான் தெரிகின்றதே! மாடு கன்று, வாங்கிடுதல் எளிது அப்பா! ஆனால் அதனை வளர்த்திடச் சக்தி வேண்டும்; புத்தியும் வேண்டும். சிந்திக்கு சளி என்று கண்டதுமே, சேதி சொல்லி அனுப்பினார் உன் எஜமான். நீயோ, குற்றுயிரான பின்னே, கொண்டு வந்தாய், உன் பசுவை. நான் என்ன செய்ய? கடுகளவேனும் கவனிப்பு இல்லை. காட்டில் மேயவிட்டாய், தீனிபோட மனமில்லாமல். ஏதேதோ விஷச் செடியைத் தின்றதாலே, இதற்கிந்தக் கதி வந்ததப்பா. இனி ஒன்றும் மருந்து இங்கு இல்லை. இதோ! இனி இதற்கு மருந்தும் தேவையில்லை!—'' என்று அவர் சொல்லும் போதே, இழுப்பு வந்ததுபோலாகிப் பசுவும், துடித்தது ஒரு விநாடி; பின்னர் தொல்லை நீங்கி, நோயை வென்று, பிணமாயிற்று.

தேனப்பன் வீட்டுக்கு அன்று வரவேயில்லை.

தேம்பிக் கிடந்த வள்ளிக்கு ஆறுதல் கூற எவராலும் இயலவில்லை.

வீட்டிற்குள்ளே இருக்கவே வள்ளிக்கு மனமும் இல்லை—கன்றைக் கட்டி அழுதபடி இருந்தாள், தோட்டந்தன்னில்.

அன்று, வள்ளி கொண்ட பாசம், தேவிக்கு, தாயில்லாக் குறையைப் போக்கிற்று.

எவ்வளவு கடினமான வேலைவந்து குவிந்தாலும், தேவிக்கு வேலை செய்யத் தயங்கிடமாட்டாள், வள்ளி.

குளிப்பாட்ட, நல்ல குளம்அழைத்துச் சென்று, அதற்குத் துணை நின்று, கழுவிவிட்டு, அழகு பார்ப்பாள்.



தாமரை கிடைக்கும் அங்கு; அதை எடுத்து 'தேவி'க்குமாலையாக்கி அழகு பார்ப்பாள்.

தொழுவத்தைச் சில நாட்கள் பார்த்துப் பார்த்து, அழுதிட்ட 'தேவி'யும், வள்ளி அன்பால், புதுத்தெம்பு கிடைக்கப்பெற்று, பொலிவு பெற்று வளர்ந்துவரக் கண்டார் ஊரார்.

வள்ளிக்குக் கன்றின்மேல் உயிர், கண்ணரா! வரப்போகும் கணவனுக்குக்கூட, இவள் இத்தனை பணிவிடைகள் செய்யமாட்டாள் போலிருக்கிறதே, என்ன கூத்து! என்று பொக்கைவாய்ப் பாட்டிகள் சொல்வர்; வள்ளி, போ! பாட்டி! எப்போதும் உனக்குக் கேலிதானா? என்று கேட்பாள்; கேட்கும் போதே, 'தேவி'மீது கண்இருக்கும், கரத்தால் முதுகைத் தடவிக் கொடுத்தபடிதானிருப்பாள்.

தாய்போனபின் கன்று ஏன்தான், வீணாய். இதனைவிற்றால், கடனிலே ஒருபகுதி கட்டலாமே என்றெண்ணித் தேனப்பன் பேசும்போதே, எழுந்துபோய், அவன் காலைக்கட்டிக்கொண்டு, என் கன்றை விற்காதீர், வேண்டாமப்பா! எப்பாடுபட்டேனும், நான் வளர்ப்பேன், பாரப்பா, தாயால்வந்த, கடனையும் தேவி தீர்ப்பாள், ஓர் நாள்! அதற்கெல்லாம் நான் உறுதி, நம்பு அப்பா! கன்று, போனால், நான் தாளமாட்டேன்'' என்று கெஞ்சுவாள் வள்ளி; அவன் சிரித்துக் கொண்டே, இவளுக்குத்தானென்ன பைத்யமோ! சரி! சரி! போ! கன்றும் நீயும் சுகமாக வாழுங்கள், அது போதும் என்பான்; எங்கப்பா தங்கப்பா! என்று சொல்லி, எகிறிக் குதித்திடுவாள், வள்ளி.

பச்சைப்பசேலென்ற காட்சி காட்டும் பட்டிக்காடுதான் பாங்கான பூமி, பாவலர்க்கு மட்டுமல்ல, ஓவியர்க்கும்; அதனால் ஓர்நாள், வள்ளியுடன் தேவி விளையாடும் காட்சி படமெடுத்தான் ஓர் இளைஞன், பின்னர் ஓவியம் தீட்ட.

என் கன்றை 'போட்டோ'வும் எடுத்தாரப்பா, என்று எக்காளமிட்டாள் வள்ளி.

ஓர் நாள், தேவிக்கு விளையாட்டு வேகம். வள்ளி கரமிருந்த கயிற்றினை அறுத்துக்கொண்டு, மான் தோற்க ஓடிற்று வயலை நோக்கி, நான் அழைத்தும் போகின்றாய், போ! போ! தேவி! நான் இனி உனக்கு அக்கா அல்ல!! என்று கூறுவாள் போல் வள்ளி, கோபம் காட்டித்தான் போனால், விளையாட்டைவிட்டு, 'தேவி' பின்னோடு வருமென்று, வீட்டுப் பக்கம், நடக்கலானாள்.

சிறிது தூரம் நடந்து, வள்ளி திரும்பிப்பார்த்தாள்; தேவி காணோம், தேவி! தேவி! என்று அழைத்தாள், குரலை உயர்த்தி. எங்கோ, 'ளொள்' 'ளொள்' என்று நாய் குரைக்கும் ஒலிதான் கேட்டாள்.

ஆள் உயரம் வளர்ந்துவிட்ட சோளக்கொல்லை, காற்றுமில்லை, ஆனால் ஆடுகிற நிலையில் கண்டாள் அங்குதான், நாயின் சத்தம். தேவியும் அங்குதான் மேய்கின்றாளோ, காவலுக்கு உள்ள நாய் துரத்தித் தான் இந்தக் கடும் சத்தம் எழுப்

கிறது என்று எண்ணிக் கவலை கொண்டாள். சோளக் கொல்லை, களமாயிற்று. தேவியைத் துரத்தித் துரத்தி, நாயும், கடிக்கிறது, வெறி கொண்டதுபோல. ஓடிப் பழக்க முண்டு தேவிக்கு, என்றாலும் அன்று பூசுணைக் கொடியொன்று காலில் சிக்கி, ஓட்டத்தைத் தடுக்கிறது; நாய்க்கு வேட்டை!

தேவிக்குத்தான் ஏதோ ஆபத்தென்று, தலைதெறிக்க ஓடுகிறாள் வள்ளி சோளக்கொல்லை நோக்கி. அங்கு அவள் கண்ட காட்சி, பயமூட்டிற்று; கன்று கடிபட்டுக் களைத்து வீழ்ந்துகிடக்கக்கண்டாள். புண் கண்டு வெற்றிகண்டோம் என்று எண்ணி, போக்கிரி நாயும், சுற்றிச் சுற்றி வந்து தன் வீரம் ஊரார்க்குக் கூறுவதுபோல, குரைத்தபடி இருந்தது, குலை நடுங்கிற்று.

தேவியை நெருங்கிப்போக முடியவில்லை, நாய் இவளை முறைக்கிறது, குரைக்கிறது, கடிக்க வருகிறது. போய்த் தேவியைக் காக்காவிட்டால் பொல்லாத நாய் மேலும் கடித்தே போடும். என் செய்வாள் வள்ளி? எடுத்தாள் ஓர் கல் — குறிபார்த்து —தன் கோபமெல்லாம் கல்லோடு கூட்டி, வேகமாய் வீசினாள் நாயைப் பார்த்து. விர்ரென்று பறந்தது அந்தக் கருங்கல் துண்டு; வெறிபிடித்த அந்த நாயின் மண்டையில் வீழ, துடிதுடித்து நாய் கத்தி, சுருண்டு வீழ்ந்தது, அப்போதே, செத்தது.

செத்தொழிந்து போனாயா, நாயே! என்று சொல்ல மனமில்லை, வள்ளிக்கு; துரத்திவிடத்தான் கல்லை வீசினாள், அது அந்த நாயைச் சாகடிக்கும் என்று அவள் எண்ணவில்லை, திகைத்து நின்றாள்.

டாமி! டாமி! என்றோர் சத்தம்! வள்ளி, திகில் கொண்டாள். நாய்க்குச் சொந்தக்காரன் வருகின்றானே, நான் செய்தது கண்டால், எனை விடவேமாட்டான், போய் ஒளித்துக் கொள்ளவேண்டும், என்று எண்ணி, வேறோர் புறம் ஒதுங்கிப், புதர்நாடிப், பதுங்கிக் கொண்டாள்.

மீண்டும், டாமீ! டாமீ! எனும் சத்தம்.

எவரும் அறியாவண்ணம், இனி இங்கு இருந்திடுதல் ஆபத்து என்று, வீடு சென்றாள், வள்ளி, கன்று இல்லை.

கன்று எங்கே, வள்ளி என்று கேட்டான், தேனப்பன்—கண்ணீர்



விட்டாள் — மென்று விழுங்குவது போலச் சேதி, மெல்ல மெல்லச் சொன்னாள் வள்ளி.

ஐயயோ! அப்படியா செய்துவிட்டாய். மிட்டா மாணிக்கம், என்னும் முரடன் நாய்தான், அந்த 'டாமி'. இந்நேரம், கண்டிருப்பான், நாய் செத்திருக்கும் கோரம். கோபம் மூண்டிடுமே, என்ன செய்வானோ? வள்ளி! நீயும், கல்லை வீசுகையில், கண்டார், உண்டோ? என்று திகில் கொண்ட தேனப்பன் கேட்கலானான்.

இல்லை அப்பா! என்று சொன்னாள், விக்கி, விம்மி.

"ஏலே! யார் அங்கே!" என்றோர் குரல் கேட்டுத் தெருவில் வந்தான்; கையில் துப்பாக்கியுடன், நின்றான் மிட்டா! அவன் காலடியில் கிடந்தது, கன்று; தேவி!

உன்னுடையதா, கன்று? என்று கேட்டான், மிட்டா.

ஆமாம் என்பதனைக் காட்டத் தலை அசைத்து நின்றான் தேனப்பன்.

எங்கே வள்ளி? என்று அந்த மிட்டா கேட்டான். தேனப்பன், ஏதேது எல்லாமே தெரிந்துதான் இங்கு இவன் வந்துள்ளான் என்று எண்ணி நடுங்கிப்போனான்.

மாணிக்கம் சிரித்தான். போ! போ! வள்ளியிடம் கூறு, கன்று, சாகவில்லை; என் நாயைக் கல்லாலே அடித்துக் கொன்றாள்; நான் அதனைக் கொல்வதற்கு முன்னதாக, வெறி அதற்கு, அதனாலே, சுட்டுக் கொல்ல, காட்டுப் பக்கம் கூட்டி வந்தேன். சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடி நாயும், கன்றினைக் கடித்தது; கண்ட வள்ளி, கல்லால் அடித்துக் கொன்றாள் என்று கூறி நின்றான், மாணிக்கம். தேனப்பன், மகிழ்ந்தான், கேட்டு.

உள்ளே ஒடுங்கி இருந்த வள்ளி, ஓடோடி வந்து கன்றை ஆவலோடு, தடவிக் கொடுத்தாள் — உடனே 'தேவி' தாவிற்று அவள்மேலே, வழக்கம்போல.

இப்போதே டாக்டரிடம் எடுத்துச் சென்று, ஏதேனும் மருந்து கொடு, கன்றை வெறிகொண்ட நாய் கடித்த காரணத்தால், விஷம் இருப்பினும் இருக்கும், என்று கூறித் துப்பாக்கி துடைத்தபடி சென்றான் மிட்டா; துயரத்திலாழ்ந்துவிட்டான், தேனப்பன்.

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... அலுவலகம் 15
இல்லம்... 118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.



டாக்டரிடம்தான், தாயும் அழைத்துச் சென்றேன்; என்று சோகித்து அவன் நின்ருன்; வள்ளி இப்போதுமா, டாக்டர் மருந்து இல்லை என்று கூறிடுவார், வா அப்பா! என்று, கூறினுள்.

சென்றனர், கன்றுடன்.

டாக்டரைக் கண்டனர்; முன்பிருந்தவர் அல்ல; இளைஞர்; அவர், கன்றின் வனப்பைக் கண்டார், அதைக் கண்ணீரால் நனைத்தபடி நின்ற பெண்ணைக்கண்டார். இத்தனை அன்பு உனக்கு இந்தக் கன்றினிடம் இருப்பது கண்டு மகிழ்கின்றேன், பெண்ணே! பயப்படாதே! கன்றுக்கு ஆபத்து வாராது, காப்பேன் என்ருர்; அதன் கழுத்தினிலே கரம் சேர்த்து, வள்ளி முத்தமிட்டாள்.

காதசைத்து, கன்று அன்பைக் காட்டிற்று, வள்ளியிடம். கண்டார் டாக்டர்.

வாயில்லா ஜீவன் என்று கூறுகின்ருேம், காதும் கண்ணும்கூட, மொழிபேசும் வித்தை காணீர் என்ருன்; மருந்தளித்தான் தேவிக்கு, வள்ளி காண.

தேவி பிழைத்துக்கொண்டசேதி, தெருவெல்லாம் பரவிற்று.

வள்ளியின் முகமோ, புதுப்பொலிவு பெற்றது; மகிழ்ச்சி வெள்ளம்!

என் கன்றுக்கு இணையாக இன்ெனென்று உண்டோ, ஈரேழுபதினுலு லோகம் முற்றும், என்றெல்லாம் கூவி ஆடுகின்ருள்; என்னுலும் முடியுமென்று கூறுவதுபோல, தேவியும் துள்ளித்துள்ளி ஆடிற்று.

பத்தோ பதினைந்தோ தானப்பா தரலாம் இந்தப் பசுங்கன்றுக்கு, என்ருலும், வட்டிக்கு ஆகிலும் இது கிடைக்கட்டும், என்றுகூறி இழுத்துச் சென்ருன், தேனப்பனுக்குக் கடன் கொடுத்தவரதப்பன். வள்ளி வீழ்ந்தாள் கீழே! கயிறறுத்து ஓடி வந்த கன்று, பக்கம்நின்று, நாவால், வள்ளியின் நெற்றியினைத்தடவிற்று; கண்டார்.

வரதப்பன், என்ன செய்வான்?

இதை எல்லாம் பார்த்திருந்தால், என் பணத்துக்குத்தான் கேடு! ஏடா! போ! போ! பணம்கொடுத்துவிட்டுப் பசுங்கன்றை நீ, பரிவோடு வளர்த்திடலாம், இல்லையென்ருல், பத்தோடு பதினென்று என்பதுபோல், பசுங்கன்றும் என் தோட்டம் சேரும் என்ருன்.

''இந்தா இருபத்து ரூபாய் நோட்டு கன்றை விட்டுவிடு!'' என்று கூறி நின்ருன், எங்கிருந்தோ அங்கு வந்த இளைஞன்.

கன்று, வள்ளி கரம் சேர்ந்தது. கண், கேள்வியைக் கேட்டது.

கன்றும் நீயும் ஆடிய காட்சியை, படமெடுத்தேன் ஓர் நாள். பின்னர் அதனை ஓவியமாய்த் தீட்டினேன்; அது கண்ட நல்லோர் எனக்குத் தந்தனர் பரிசு! அதில் இது சிறு தொகை! என்ருன் இளைஞன்.

அவன் கூறும் சேதி, தன்னைப் பற்றி என்று அறிந்தோ, தேவி காதை, அவன் பேச்சுக்குரல் பக்கம் காட்டி நின்றது; அழகானதோற்றம்.

"பாரப்பா, என் தேவி! தன்னைத் தானே, விடுவித்துக்கொள்ளும் நிலை பெற்றுவிட்டாள். இது மட்டும்அல்ல அப்பா! முன்பே சொன்னேன்! முன்னம், தாயாலே ஏற்பட்ட கடனெல்லாம், தேவியே தீர்த்துவைப்பாள்; பார் எந்தன் பேச்சை'' என்று, வள்ளி கூறிவிட்டு, வாரி அணைப்பது போல், தேவியைத் தழுவுகின்ருள்.

தேவியும் வள்ளியின் காதோடு, தன் வாயைக் கொண்டுசேர்த்து ஏதேதோ, கதைபேசி, மகிழ்ந்திடுது.

❊

## ஜெர்மனியில்....!

*பள்ளி ஆசிரியர், கிராம வாழ்விற்கும் தமது குழந்தைகளின் வளர்ச்சிக்கும் எவ்வளவு முக்கியமானவர் என்பதை விவசாயிகள் பூரணமாக உணர்ந்துள்ளனர். கிராம மக்கள் தமது குழந்தைகளின் ஆசிரியரை மிகவும் மதித்துப் போற்றுகின்றனர். அவர் அவர்களின் நண்பராகவும் ஆலோசகராகவும் விளங்குகிருர். அவர், களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளார். இவ்வாறு ஆசிரியர்கள் மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதால் தான், அவர்கள் தமதுகடமைகளைச் செவ்வனே நிறைவேற்ற முடியும். இவ்வாறு கிராமப்புற ஆசிரியரின் கடமைகள் ஏராளம் எனலாம். எனவே, அவர்களின் இந்த உழைப்பின் பலன் மிகவும் இனிமையானது என்பதில் ஐயமுண்டோ!*

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு'' அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணுதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.